கனம் திரு. எம். பக்தவத்சலம்: நான் இதற்கு முன்பே தெளிவாகப் பதில் அளித்திருக்கிறேன். உத்தியோகஸ்தர்கள் வசூலிக்கக் கூடாது. உத்தியோகப் பற்றற்றவர்கள் போதிய அளவு வசூலிக்க முடியாது என்று அவர்கள் கூறினார்கள். ஆகவே தான் இந்த நாடகம் நிறுத்தப்பட்டது.

திரு. இராம. அரங்கண்ணல்: திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த ஒரு எம்.எல்.ஏ. முன்வந்தது போல காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஒரு எம்எல்.ஏ. யாராவது நாடகம் நடத்துவதற்கு முன்வந்தது உண்டா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர்களில் யார் நடிகர் என்பது எனக்குத் தெரியாது. (சிரிப்பு).

Teacher-Pupil ratio

* 13 *Q.*—Sri S. MADHAVAN: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Government have directed the Panchayat unions to maintain the ratio of teacher-pupils in 1:35 in the Elementary Schools; and

(*b*) whether it is a fact that a number of teachers have been ousted as a result of this order?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: (*a*) Yes
(*b*) No.

திரு. எஸ். மாதவன்: பஞ்சாயத்து யூனியன் முழுவதும் உள்ள மாணவர்களைக் கணக்கிட்டு விகிதாசாரம் அமுல் நடத்தப்பட்டிருக்கிறதா? அப்படி அமுல் நடத்தப்பட்டிருப்பதால் சில பள்ளிகளில் 69 பேர்கள் இருந்தால் கூட ஒரு ஆசிரியர் இருக்கவேண்டும் என்று சூழ்நிலை இருக்கின்றதா? அதுபற்றி அரசாங்கத்திற்குப் புகார் வந்திருக்கிறதா? அதை அரசாங்கம் பரிசீலனை செய்ததா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: சில புகார்கள் வந்திருக்கின்றன, தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது. ஒரு பள்ளி மட்டும் அல்ல பஞ்சாயத்து யூனியன் மொத்தத்தையும் எடுத்துக் கொண்டு பார்க்கலாம், மாவட்டம் மொத்தத்தையும் எடுத்துக் கொண்டு பார்க்கலாம் என்று கூட இப்பொழுது தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது. எந்த விதத்திலும், இருக்கிற ஆசிரியர் யாரும் வேலையை விட்டு நீக்கப்படக்கூடாது என்று தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது.

திரு. செ. மாதவன்: இருக்கிற ஆசிரியர்கள் வெளியேற்றப்படக் கூடாது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். விகிதாசாரம் அமுல் நடத்தப்படும் என்ற உத்தரவு போட்டபொழுதே சில பஞ்சாயத்து யூனியன்கள் சில ஆசிரியர்களை வேலையிலிருந்து

6th August 1963]

நீக்கி வெளியே அனுப்பிவிட்டார்கள். அந்த ஆசிரியர்கள் திரும்பவும் கட்டாயமாக வேலைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்று அரசாங்கம் உத்தரவிடுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : குறிப்பாகத் தகவல்கள் அரசாங்கத்திற்குத் தெரிவிக்கப்பட்டால் அது பற்றிக் கவனம் செலுத்தப்படும்.

திரு. ம. கமலநாதன் : ஆசிரியர் மாணவர்கள் விகிதாசாரத்தைப்பற்றி முழு விவரங்களையும் ஆராய்ந்து அறிக்கை தயாரிக்கும்படி கல்வித் துறை இயக்குநரை அரசாங்கம் கேட்டிருக்கிறதா? அப்படிக் கேட்டிருந்தால் அவர் அதைப்பற்றி என்ன முடிவு தெரிவித்திருக்கிறார்கள் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்வாறு ஒன்றுமில்லை.

திரு. கரு. சீமைச்சாமி : இந்த ஜி.ஓ.-வின்படி ஒரு ஆசிரியருக்கு 35 பிள்ளைகள் இருக்கவேண்டியிருக்கிறது. அறுபத்தொன்பது பிள்ளைகள் இருந்தாலும் ஒரு ஆசிரியர் தான் பணியாற்றவேண்டியிருக்கிறது. இந்த ஜி.ஓ. வந்தபொழுதே 35 பிள்ளைகளுக்கு மேலே இருந்தாலும், இரண்டு ஆசிரியர்கள் பணியாற்றிக் கொண்டிருந்தால், ஒருவரை 'ஊஸ்டு' செய்யவேண்டிய நிலை இருக்கிறது. இதைக் கருதி இதற்கு என்ன ஏற்பாடுகளை அரசாங்கம் செய்ய இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் அங்கத்தினர் ஒரு பஞ்சாயத்து யூனியன் தலைவர். ஆகவே, அவர்களுடைய அனுபவத்தையொட்டி அவர்களுடைய கருத்துக்களைத் தெரிவித்தால், மேலே கவனம் செலுத்தி, வேறு விளக்கங்கள் கூறவேண்டுமானாலும், அல்லது மாறுதல் வேண்டுமானாலும் செய்யலாம்.

திரு. எம். எஸ். செல்வராஜன் : ஏற்கனவே வேலையில் இருந்த ஆசிரியர்கள் யாரும் நீக்கப்படவில்லை என்பது உண்மையானாலும் கூட, புதியதாக இந்த ஆண்டில் டிரையினிங் படித்து பாஸ் செய்து வந்தவர்களில் ஒரு ஆசிரியர் கூட, திருநெல்வேலி ஜில்லாவைப் பொறுத்த மட்டிலும் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை என்ற தகவல் கிடைத்திருக்கிறது. இது போன்ற நிலைமை தான் மற்ற ஜில்லாக்களிலும் இருக்கும் என்று நினைக்கிறேன். இது பற்றி என்ன ஏற்பாடு செய்ய உத்தேசம் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : போதிய ஆசிரியர்கள் ஏற்கனவே நியமிக்கப்பட்டிருந்தால், புதியதாக ஒருவரையும் வேலைக்கு எடுத்துக்கொள்ளுவதற்கில்லை. அதிகமாக இருக்கும் ஆசிரியர்களை வேலையிலிருந்து நீக்கவில்லை என்றாலும், மாணவர்கள் அதிகப்பட்டால், புதியதாக ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள். இந்த நிலையிலே திருநெல்வேலியில் புதியதாக பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கு இடம் இல்லாமல் இருக்கலாம். வேறு மாவட்டத்திற்கு அவர்கள் போகவேண்டும். சமீபத்தில் கோவையில் கூட திருநெல்வேலியிலிருந்து 50, 60 ஆசிரியர்கள் அங்குள்ள பள்ளிகளில் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று தெரிவித்தார்கள்.

[6th August 1963

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்: 1:35 ரேஷியோவை குறைப்பதுபற்றி சர்க்கார் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறதா? அம்மாதிரி குறைக்கவேண்டும் என்று சர்க்காருக்கு விண்ணப்பங்கள் வந்திருக்கின்றனவா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இதை மாற்றுவதாக அரசாங்கத்திற்கு இப்பொழுது உத்தேசம் இல்லை.

திரு. கோ. சி. மணி: இந்த விகிதாசாரத்தில் பயிலும் மாணவர்களின் தரம் குறைகிறது என்று அரசாங்கத்திற்கு ஏதாவது பொது மக்கள் சார்பாக மனுக்கள் வந்திருக்கின்றனவா? அது பற்றிப் பரிசீலிக்கப்பட்டதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அதற்கு மனுவைப் பார்க்க வேண்டியதில்லை. குறைந்த மாணவர்கள் இருந்தால் நலம் தான், மாணவர்கள் மீது நல்ல கவனம் செலுத்தலாம். ஆனால் வேறு நிலைகளையும் கணக்கில் எடுத்துக்கொள்ளவேண்டும். இடம், மற்ற பொருள் நிலை, எல்லாவற்றையும் கணக்கில் எடுத்துக்கொண்டு, இம்மாதிரி சில கட்டுப்பாடுகளைச் செய்யவேண்டியிருக்கிறது.

திரு. வை. சங்கரன்: 1:35 ரேஷியோ அதிகமாக இருப்பதால் ஆசிரியர்கள் மாணவர்களிடையே 'இண்டிவிஜுவல் அடென்ஷன்' கொடுக்கமுடியவில்லை. அதன் காரணமாக மாணவர்களின் தரம் குறைகிறது என்று புகார்கள் வந்திருக்கின்றனவா? அப்படியிருந்தால் இந்த விகிதாசாரத்தைக் குறைக்க உத்தேசம் உண்டா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இதற்குத்தான் சற்று முன்பு விடை அளித்தேன்.

திருமதி டி. என். அனந்தநாயகி: 35 மாணவர்கள் இருக்க வேண்டும் என்ற நிலை இருப்பதால், ஒரே ஆசிரியரே முதல் வகுப்பையும், இரண்டாவது வகுப்பையும் பார்த்துக்கொள்ளவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இம்மாதிரி இரண்டு வகுப்புகளையும் ஒரே ஆசிரியரே பார்த்துக்கொள்ளவேண்டிய சூழ்நிலை ஏற்படுவதனால், கல்வியின் தரம் பாதிக்கப்படாதா என்பதை அரசாங்கம் ஆலோசித்திருக்கிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: ஒரே ஆசிரியர் இரண்டு வகுப்புகளையும் பார்க்கவேண்டிய நிமித்தம் இருக்காது.

திரு. கி. இரா. சம்பந்தம்: புதிய திட்டப்படி ஆரம்பப் பள்ளிகளில் மாணவர்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள், தரம் குறைகிறது என்று பொது ஜனங்களிடமிருந்தும், மற்ற பிரதிநிதிகளிடமிருந்தும் சர்க்காருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. பழைய 'சிலாப் ஸிஸ்டத்தை' மறுபடியும் கொண்டு வருவதற்கு சர்க்கார் முயற்சிக்குமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இதற்கு முன்பே விடையளித்துவிட்டேன். தற்பொழுது வேறு மாறுதல் செய்வதாக இல்லை.